சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 30.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **123/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-6 |
| சாட்சியின் பெயர் | : | ரவி (எ) மாரிமுத்து |
| தந்தை பெயர் | : | கணேசன் |
| கிராமம் | : | அண்ணாநகர்,<br>திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | பேக்கரி கடை வைத்து<br>நடத்தி வருகிறேன். |
| வயது | : | 40 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. R. வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பேக்கரி கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 குமாரை தெரியும். ஆஜராகியுள்ள

எதிரியை தெரியாது. அ.சா.1 குமார் வீட்டிற்கு எதிரில் நான் பேக்கரி கடை வைத்துள்ளேன். கடந்த 19.03.2025ம் தேதியன்று அ.சா.1 குமார் வீட்டில் கூட்டமாக இருந்தது. சத்தம் போட்டார்கள். நான் கடையிலிருந்து அ.சா.1ன் வீட்டிற்கு போய் பார்த்தேன். அங்கு அ.சா.1ன் வீட்டில் அவரது இரண்டாவது மகள் தூக்கு போட்டு கொண்டு, தூக்கில் தொங்கி கொண்டிருந்தார். நான் தூக்கிலிருந்து இறக்கி விட்டேன். போலீசார் அந்த இடத்திற்கு வந்து விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன். போலீசார் என்னை விசாரணை செய்ததற்காக இரண்டு கையெழுத்துக்கள் கேட்டார்கள். போட்டுக்கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. எனக்கு படிப்பறிவு இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரான அ.சா.ஆ.2 இல் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரான அ.சா.ஆ.3 இல் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை இந்த வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள். போலீசாரிடம் இதை சொல்லியுள்ளேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 குமார், அ.சா.2 சாந்தி எங்கள் தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். போலீசார் எந்த தேதியில் வந்து விசாரித்தார்கள் என்றால் தேதி மட்டும் தெரியாது. ஆனால் போலீசார் வந்து விசாரித்தார்கள். போலீசார் காக்கி சட்டையில் வந்தார்களா என்றால் ஆமாம். அவர்கள் என்ன பதவி வகித்தார்கள் என்றால் தெரியாது. அவரது பெயர் என்ன என்றால் தெரியாது. நான் கடையில் இருக்கும்போது என்னிடம் போலீசார் கையெழுத்து வாங்கி கொண்டார்களா என்றால் நான் கடையில் இருந்தேன். என்னை வரச்சொல்லி அ.சா.1 குமார் வீட்டிற்கு முன்பு கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தது

என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் அ.சா.ஆ.2 பார்வை மகஜர், அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை படித்துக்காட்டவில்லை என்றால் சரிதான். இன்றைய தினம் அ.சா.2 சாந்தி இந்நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்றால் வந்திருக்கிறார். சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும், அ.சா.1, அ.சா.2 ஆகியோர் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்றாலும், அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.அ.சா.2 தான் என்னை இந்நீதிமன்றத்திற்கு செலவு செய்து அழைத்து வந்து பொய் சாட்சியமளிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.30 18:17:13 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.